சார்பு நீதிமன்றம், உதகமண்டலம்.
முன்னிலை:- திரு. ஆர். தங்கவேல், பி.எஸ்ஸி., பி.எல்.,
சார்பு நீதிபதி, உதகமண்டலம்.

2016ம் வருடம், செப்டம்பர் மாதம் 23ம் நாள் வெள்ளிக்கிழமை

அசல் வழக்கு எண்.216/ 2013

திரு.எல்.ராமன் .... வாதி

/ எதிராக /

1) திரு. ஆர்.பாலன்

2) திருமதி.பி.விஜயா

3) தலைவர், தும்மனட்டி பஞ்சாயத்து,
தும்மனட்டி கிராமம் மற்றும் அஞ்சல்,
உதகமண்டலம்.

4) கிளை மேலாளர், யூனியன் பேங்க் ஆ∴ப் இண்டியா,
குன்னூர் கிளை, குன்னூர், நீலகிரி மாவட்டம். .... பிரதிவாதிகள்

இவ்வழக்கு என் முன்னர் இறுதியான விசாரணைக்காக 09.09.2016ம் தேதி வரப்பெற்று, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.வி.ராஜாகிட்டு, எச்.பீமராஜ் ஆகியோர் முன்னிலையாகியும், 1 மற்றும் 2ம்பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.சுகுமாரன், திரு.கே.சந்துரு, திரு.எல்.அசோக்குமார் திரு.எச்.நந்தகுமார், திருமதி.அலமேலுமங்கை ஆகியோர் முன்னிலையாகியும், 4ம்பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜி.கிருஷ்ணகுமார் அவர்கள் முன்னிலையாகியும் 3ம்பிரதிவாதி தோன்றா தரப்பினர் ஒருதலை பட்சமாக தீர்மானிக்கப்பட்டும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளை செவிமடுத்தும், ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரை பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில், இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

தீர்ப்புரை

தாவா “பி” செட்யூல் சொத்தின் மீது சுவாதீனம், நிரந்தரதடை உத்தரவு 1, 2 பிரதிவாதிகள் மீது கோரியும், செயலுறுத்து கட்டளை 3ம்பிரதிவாதி மீது கோரியும், 4ம்பிரதிவாதி மீது நிரந்தர தடை உத்தரவு கோரியும் வாதியால் தாவா தாக்கல்.

2) வாதி வழக்குரையின் சுருக்கம்:- 18.4.1967ல் தாவா சர்வே எண்ணில் 4 சென்ட நிலத்தை ஒரு மூக்கன் என்பவரிடம் வாதி கிரயம் பெற்ற காலத்தில், கிரயதாரரும் அவரின் கூட்டு பட்டாதாரரும் பொதுவில் அனுபவத்தினால், மேற்படி கிரய ஆவணத்தில் குறிப்பிட்டு நான்கு எல்லை சொல்லப்படவில்லை. கிரய ஆவணத்தை தொடர்ந்து, அன்று வாதி சொத்தை சுவாதீனம் எடுத்துக்கொண்டும், 1968ம் ஆண்டில் தனது கிரய சொத்தில் வீடு கட்டினார். வாதிக்கு, 1ம்பிரதிவாதி பாலன் உட்பட மொத்தம் 6 மகன்கள் குழந்தைகள் பிறப்பு காலத்தில், வாதி மேலும் தனது சம்பாத்தியம் மூலம் 4 வீடுகளை கட்டினார். மேற்படி 5 வீடுகளும் ஒரே பொறியியல் கட்டுமானத்திற்குள் அடங்கியது என்பதினால் ஒவ்வொரு வீட்டிற்கும் இடையே பொது சுவர் அமைக்கப்பட்டிருந்தது. பின்னிட்டு 2000ம் ஆண்டில் மேற்படி கூரை வீடுகளை வாதி கான்கிரீட் வீடுகளாக மாற்றினார். மேற்படி கான்கிரீட்டும் தனித்து பிரிக்க முடியாது. மேற்படி 5 வீடுகளும், தும்மனட்டி பஞ்சாயத்து வாதி பெயருக்கு தீர்வை விதித்தும், அதன்படி வாதி வீட்டு வரியும் செலுத்தி வருகிறார். பழைய கதவிலக்கங்கள் 5/425, 5/425ஏ முதல் டி

வரையிலான சொத்துக்களுக்கு உரிய புதிய கதவிலக்கங்கள் முறையே 5/452, 5/454 5/453, 5/451, மற்றும் 5/455 மகன்கள் திருமணம் முடிந்ததும், 5 பேரும் மேற்படி வீடுகளை அனுபவித்துக்கொள்ள வாதி வாய்மொழியாக அனுமதி கொடுத்தார். அதன்படி 4வது மகன் சங்கரனுக்கு கதவிலக்கம் 5/451, வாதியும் அவரின் மனைவியும் 6வது மகன் ரமேஷுடன் கதவிலக்கம் 5/452, 2வது மகன் 1ம்பிரதிவாதிக்கு கதவிலக்கம் 5/453, 1வதுமகன் லோகராஜுக்கு கதவிலக்கம 5/454 3வது மகன் ஜனசேகரனுக்கு கதவிலக்கம் 5/455, 18.4.1964ம் தேதியிட்ட கிரய நிலம் மற்றும் அதிலுள்ள மேற்படி 5 வீடுகளும் வாதிதான் உரிமையாளர் என்ற நிலையில், அனுபவித்து வருகிறார். சர்வே எண். 732ல் 5 சென்ட் நிலம் வாதியின் மகன்கள் லோகராஜ் மற்றும் ரமேஷ் ஆகியோர் 07.04.2000ல் கிரயம் பெற்ற நிலம் மேற்படி 5 வீடுகளுக்கு முன்புற வாசலாக உள்ளது. 5வது மகன் ஹால்துரை தாவா சர்வே எண்ணில் 3-1/2 சென்ட் நிலம் 06.07.2001ல் மேற்படி 5 வீடுகளுக்கு பின்புறம் கிரயம் பெற்றது பின்வாசலாக உள்ளது. 1, 2 பிரதிவாதிகளிடையே 1988ம் ஆண்டில் வாதிதான் திருமணம் செய்து வைத்தும், கதவிலக்கம் 5/453ல் குடியிருக்க அனுமதியும் கொடுத்தார். மேற்படி வீட்டிற்கு வாடகை எதுவும் வாதி வசூல் செய்வதில்லை. கதவிலக்கங்கள் 5/451, மற்றும் கதவிலக்கம் 5/452க்கு இடையில்தான் கதவிலக்கம் 5/453 உள்ளது. கதவிலக்கங்கள் 5/454 மற்றும் கதவிலக்கம் 5/455ம் கிழக்கு பக்கம் உள்ளது. தெற்கு பக்கம் முன்வாசல் நிலம் லோகராஜ் மற்றும் ரமேஷ் கிரயம் பெற்றது. வடக்கு பக்கம் ஹால்துரை கிரயம் பெற்ற நிலம். மேற்படி சொத்துதான் தாவா “ஏ” செட்யூல் சொத்து. தாவா சொத்துக்களுக்குரிய புகைப்படங்கள் மற்றும் தோராய வரைபடமும் தாக்கல். தாவா “ஏ” செட்யூல் சொத்து வாதிக்கு மட்டுமே உரிமை. 1,2 பிரதிவாதிகள் வாதி மற்றும் அவரின் மற்ற வாரிசுகள் மீது விரோதம் கொண்டும் பிரச்சனை செய்து வருகின்றனர். 10.01.2007ல் 1ம்பிரதிவாதிக்கு கதவிலக்கம் 5/453ல் கொடுக்கப்பட்ட வாய்மொழி அனுமதியை ரத்து செய்து, சொத்தின் சுவாதீனம் கோரியும், வாதி தரப்பில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. மேற்படி கதவிலக்கம் 5/453 சொத்துதான் தாவா “பி” செட்யூல் சொத்து. அறிவிப்பு பெற்றுக்கொண்டும், பதில் அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை. தாவா “பி” செட்யூல் சொத்திற்கு, 2ம்பிரதிவாதிதான் உரிமையாளர் போல கண்டு வாதி மற்றும் அவரின் மற்ற மகன்கள் மீது ஜுன் 2013ல் 1ம்பிரதிவாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தும், மேற்படி காவல் துறை விசாரணையிலிருந்து, 1ம்பிரதிவாதி ஆவணங்கள் பதிவு செய்தும், தாவா “பி” செட்யூல் சொத்தின் 3ம்பிரதிவாதி பதிவேட்டில் வாதியின பெயரை மாற்றம் செய்தும், ஆவண பதிவெண்கள் 815/2010, 816/2010, 963/2012 மற்றும் 317/2013 நகல்கள் 21.06.2013ல் பெற்றும், அதனை பார்த்ததில் வாதியின் கிரயதாரர் மூக்கனின் வாரிசுகள் மிச்சியம்மாள், சிவகுமாார் மற்றும் சண்முகம் ஆகியோருடன் கள்ளக் கூட்டாக சேர்ந்த ஆவண எண். 815/2010 மற்றும் 816/2012 உருவாக்கப்பட்டும், மேற்படி ஆவண எண். 816/2015ல் கதவிலக்கம் 5/451 உள்ளது. அதேபோல ஆவண எண். 815/2010 சொத்தில் ஏற்கனவே கதவிலக்கம் 5/453 உள்ளது. மேற்படி 2 கிரய ஆவணங்களும் பொய்யாக உருவாக்கப்பட்டது. 3ம்பிரதிவாதியின் துணையுடன், 1ம்பிரதிவாதி தன் பெயருக்கு வரி வதிப்பும் தாவா “பி” செட்யூல் சொத்திற்கு மாற்றி கொண்டார். பின்னிட்டு தாவா “பி” செட்யூல் சொத்தை தனது மனைவி 2ம்பிரதிவாதி பெயருக்கு 24.09.2012ல்தான் செட்யூல்மெண்ட் கொடுத்தும், வருவாய்துறை ஆவணம் பெயரும் மாற்றப்பட்டுள்ளது. 2ம்பிரதிவாதி தாவா “பி” செட்யூல் சொத்தின் மீது, 4ம் பிரதிவாதி வங்கி துணையுடன் 03.04.2013ல் ரூ.5 இலட்சத்திற்கு அடமான கடனும் ஏற்படுத்தியுள்ளார். 1,2 பிரதிவாதிகள் மோசடியாக உருவாக்கியுள்ள ஆவணங்கள்

மோசடியானது என்பதினாலும் வாதியை கட்டுப்படுத்தாது. மேற்படி ஆவணங்களில் சொல்லியுள்ள சொத்தின் நான்கு எல்லைகளும் தவறு. மேற்படி பிரச்சனைகள் மீதும் அடமானம் கொடுத்த வங்கி உட்பட அனைவர் மீதும், மத்திய புலனாய்வு துறை காவல்துறை கண்காணிப்பாளருக்கு 21.6.2013ல் புகார் கொடுத்தும், அதற்குரிய நகலும் மத்திய தலைமை வங்கிக்கு அனுப்பப்பட்டது. தாவா "பி" செட்யூல் சொத்து வாதிக்கு உரிமை என்ற நிலையில், அதன்மீது 2ம்பிரதிவாதி, 4ம்பிரதிவாதியிடம் ஏற்படுத்தியுள்ள அடமானம் செல்லாது. மேற்படி அடமான ஆவணத்தின் மீது 4ம்பிரதிவாதி எவ்வித நடவடிக்கையும் எடுக்க முடியாது. எனவே விளிம்புகை சொத்து சுவாதீனம், செயலுறுத்து கட்டளை மற்றும் நிரந்தர தடை உத்தரவும் பிறப்பித்து செலவு தொகையுடன் தீர்ப்பாகவேண்டும்.

3) **<u>1ம் பிரதிவாதி எதிர் வழக்குரையின் சுருக்கம்:- 2ம்பிரதிவாதி அதனை அனுசரிக்கிறார்:</u>** வழக்கு தவறானது. சட்டப்படியும், நியாயப்படியும், நிலை நிற்கத்தக்கதல்ல. 4ம் பிரதிவாதிக்கு சி.பி.கோ. பிரிவு 80(1)ன் கீழ் முன்னறிவிப்பு கொடுக்காமல் தாக்கல் செய்துள்ள வழக்கு ஏற்புடையதல்ல. வழக்குரை பாரா-3ல் வாதி கிரயம் பெற்றதாக சொல்வது ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆனால் மாதிரி வரைபடம் முன்னுக்குப்பின் முரணாக உள்ளது. வாதி கிரயம் பெற்ற சொத்தில் முழுவதும் கதவிலக்கம் 5/52 கட்டிடம் கட்ட உபயோகப்படுத்தப்பட்டது. மேற்படி கட்டிடம மற்றும் அதற்குரிய முன் வாசல் உட்பட சுமார் 4 செண்ட் நிலம் 1ம்பிரதிவாதி விவசாய வருமானம் உட்பட அனைத்தும் சேர்த்துதான் தாவா சொத்தில் வீடுகள் கட்டப்பட்டது. மகன்கள் 5 பேரும் குடியிருக்க, வாதி வாய்மொழியாக அனுமதி கொடுத்தாக சொல்வதும் தவறு. திருமணத்திற்கு பிறகு நடந்த வாய்மொழி பாகப்பிரிவினையில் கதவிலக்கம் 5/453. பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டும், அது முதல் சுவாதீனத்தில் இருந்து அனுபவித்து வருகிறார். வாதி தரப்பில் அனுப்பப்பட்ட முன் அறிவிப்பை தவிர, வழக்குரை பாரா-9ல் சொல்லியுள்ள அனைத்தும் தவறு. அறிவிப்பின் மீது வாதியிடம், பிரதிவாதி கேட்க, மற்ற மகன்கள் வற்புறுத்தியதால்தான் அறிவிப்பு கொடுத்ததாக தெரிவித்ததனால் அதற்கு பிரதிவாதிகள் தரப்பில் பதில் அறிவிப்பும் கொடுக்கவில்லை. மற்ற மகன்களின் தூண்டுதலின் பேரில்தான், வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். கட்டிடம் கட்டிய பிறகுதான், பிரதிவாதி நிலத்தை கிரயம் பெற்றார் என்பது உண்மைதான். ஆனால் வாய்மொழி பாகப்பிரிவினையின்போது குடும்ப உறுப்பினர்கள் எடுத்த முடிவின்படிதான் அவ்வாறு கிரயம் பெறப்பட்டது. வாதியின் மற்ற மகன்களும் கட்டிடம் கட்டிய பிறகுதான், சொத்தை கிரயம் பெற்றனர். வழக்குரை பாரா 11 முதல் 14 வரையில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானது. வழக்கு கால வரையால் தடைப்பட்டுள்ளது. மேலும் வழக்குமூலமும் எழவில்லை. தாவாவை தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

4) **<u>4ம்பிரதிவாதி எதிர் வழக்குரையின் சுருக்கம்:</u>** வழக்கு தவறானது. சட்டப்படியும், நியாயப்படியும், நிலை நிற்கத்தக்கதல்ல. வழக்குரை பாரா-3 முதல் 10 வரையில் சொல்லியுள்ள சங்கதிகளை வாதிதான் மெய்ப்பிக்க வேண்டும். 03.04.2013ல் 2ம்பிரதிவாதி தாவா "பி" செட்யூல் சொத்தை, 4ம்பிரதிவாதியுடன் சேர்ந்து, மோசடியாக ரூ.5 இலட்சத்திற்கு அடமான ஆவணம் ஏற்படுத்தியதாக சொல்வது தவறு. வங்கி கொடுக்கும் கடனுக்குத்தான் முறையாக அடமான ஆவணம் ஏற்படுத்தப்பட்டது. மேற்படி கடன் கொடுக்கும் காலத்தில், 24.09.2012ம் தேதியிட்ட 2ம்பிரதிவாதி பெயருக்கு ஏற்பட்ட தானசெட்டில்மெண்ட் அதற்குரிய 02.09.2010ம் தேதியிட்ட 1ம்பிரதிவாதி பெயரில் உள்ள கிரய ஆவணம் மற்றும் பட்டா வீட்டுவரி ரசீது மற்றும் வில்லங்க சான்றிதழ் அனைத்தும் சரிபார்க்கப்பட்டுதான் உரிய சட்ட கருத்து

பெற்றும், அடமான ஆவணத்தின் அடிப்படையில், 2ம்பிரதிவாதிக்கு கடன் கொடுக்கப்பட்டது. தாவா "பி" செட்டியூல் சொத்தின் மீது, 1, 2 பிரதிவாதிகள் மோசடியாக 4 ஆவணங்களை உருவாக்கியிருப்பதாக வழக்கில் சொல்வதும் தவறு. தாவா "பி" செட்டியூல் சொத்தில், 2ம்பிரதிவாதிகளு உள்ள உரிமையை முறையாக ஆய்வு செய்த நிலையில்தான் சட்ட கருத்து பெற்றும் அடமான கடன் பிரதிவாதி வங்கி கொடுத்தது. வழக்குரை பாரா-13 முதல் 15 வரையில் சொல்லியுள்ள சங்கதிகளும் தவறு. மத்திய புலனாய்வு துறையிடம், வாதி கொடுத்த புகாரை 1, 2 பிரதிவாதிகள் நடத்தி கொள்வதாக தெரிவித்ததினால், அந்த பிரச்சனைக்கும், பிரதிவாதிக்கும் சம்மந்தம் இல்லை. வழக்கிற்கு வழக்கு மூலமே எழவில்லை. சொல்லியுள்ள வழக்குமூலம் பொய்யாக உருவாக்கப்பட்டது. தாவா காலத்தில் "பி" செட்டியூல் சொத்தின் சந்தை மதிப்பு ரூ.10 இலட்சத்திற்கு குறைவில்லை என்ற நிலையில், மேற்படி சொத்து மதிப்பு ரூ.1,10,000/- என்று மதிப்பீடு செய்து வாதி செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணமும் தவறு. தாவாவில் வாதிக்கு எவ்வித தீர்வும் கிடைக்கதக்கதல்ல என்பதினால், வழக்கை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

5) மேற்படி வழக்குரை மற்றும் எதிர் வழக்குரை பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்ட எழுவினாக்கள் வரையப்பட்டன.

எழுவினா 1 : தாவா காலவரையால் தடைப்பட்டுள்ளதா?

எழுவினா 2 : தாவா தோராய வரைபடம் முற்றிலும் தவறானதா?

எழுவினா 3 : தாவா சொத்தில் 2ம் பிரதிவாதி சுவாதீனத்தில் உள்ளாரா?

எழுவினா 4 : தாவாவில் கோரியவாறு விளிம்புகை சொத்து சுவாதீனம் மற்றும் நிரந்தர தடை உத்தரவும் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?

எழுவினா 5: தாவாவில் கோரியபடி செயலுறுத்து கட்டளை கிடைக்கத்தக்கதா?

எழுவினா 6: தாவாவில் கோரிய வாதிக்கு நிரந்தர தடை உத்தரவு கிடைக்கத்தக்கதா,?

எழுவினா 7: வாதிக்கு கிட்டும் இதர தீர்வு என்ன?

வாதி தரப்பில், வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டும், அவர் தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.18 வரையிலான ஆவணங்களும், பிரதிவாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதி பி.சா.1 ஆகவும், 4ம்பிரதிவாதி வங்கி மேலாளர் பி.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டும், அவர்கள் தரப்பில் பி.சா.ஆ.1ம் குறியீடு செய்யப்பட்டது.

6) எழுவினா 2 : தாவா தோராய வரைபடம் முற்றிலும் தவறானதா?

மற்றும்

எழுவினா 3 : தாவா சொத்தில் 2ம் பிரதிவாதி சுவாதீனத்தில் உள்ளாரா?

தாவா சொத்து, உதகை தாலுக்கா, தும்மனட்டி கிராமம், மைனாலா கிராமத்தில் பழைய அளவை எண்.732. அதற்குரிய மறுஅளவை எண்.1035/2ல் 4 சென்ட் நிலம் மற்றும் அதிலுள்ள கதவிலக்கங்கள் 5/451 முதல் 5/455 வரைக்குரிய 5 வீடுகள். தாவா "ஏ" செட்யூல் சொத்து, அதில் ஒரு பகுதியான கதவிலக்கம் 5/453தான் தாவா "பி" செட்யூல் சொத்து. தாவா "ஏ" செட்யூல் சொத்து 4 சென்ட் நிலத்தை வாதி 1967ம் ஆண்டில் ஒரு மூக்கன் என்பவரிடம் காலி நிலமாக கிரயம் பெற்றும், 1968ல் அதில் ஒரு கூரை வீடு கட்டியும், 1ம்பிரதிவாதி உட்பட தனக்கு 6 மகன்கள் பிறந்த நிலையில், மேலும் 4 வீடுகளை கட்டியும், பின்னிட்டு 2000ம் ஆண்டில் மேற்கூரை கான்கீரிட் தளமாக மாற்றியும், அனுபவித்து வருகையில், 1ம் பிரதிவாதி

மற்றும் 2ம்பிரதிவாதிகளிடையே 1988ல் ஆண்டில் திருமணம் நடைபெற்ற நிலையில், தாவா "பி" செட்யூல் சொத்தை, வாய்மொழி அனுமதியின்பேரில்தான் குடியிருக்க அனுமதி கொடுத்தும், அதே போல, தாவா "ஏ" செட்யூல் உள்ள சொத்தும், மற்ற மகன்களுக்கு குடியிருக்க அனுமதி கொடுக்கப்பட்டது. இருப்பினும் வாதியின் கிரயதாரர் மூக்கன் வாரிசுகளிடம், மோசடியாக, 1ம் பிரதிவாதி 2010ம் ஆண்டில் கிரய ஆவணத்தை உருவாக்கியும், பின்னிட்டு மேற்படி சொத்தை தனது மனைவி 2ம்பிரதிவாதிக்கு 20-2ம் ஆண்டில் செட்டில்மென்ட் கொடுத்தும், அதன்மீது 4ம் பிரதிவாதி வங்கியிடம் 2013ம் ஆண்டில், ரூ.5 இலட்சம் அடமான கடன் பெற்றது மோசடியானது. மேலும் தான் 1ம்பிரதிவாதிக்கு கொடுத்த வாய்மொழி அனுமதியை 10.01.2007ல் சட்ட அறிவிப்பின் மூலம் ரத்து செய்திருப்பதாகவும், இருப்பினும், 1ம்பிரதிவாதி சொத்தை காலி செய்து சுவாதீனம் கொடுக்காத நிலையில், தாவாபடி தீர்ப்பாக வேண்டுமென்பது வாதி தரப்பு வாதம்.

7) 1988ம் ஆண்டில் 1ம்பிரதிவாதியின் திருமணம் முடிந்த நிலையில் குடும்பத்தில் ஏற்பட்ட வாய்மொழி பாகப்பிரிவினைப்படிதான் தாவா "பி" செட்யூல் சொத்து 1ம்பிரதிவாதிக்கு பாகம் ஒதுக்கப்பட்டது. மேலும் "ஏ" செட்யூல் சொத்தில் வீடுகள் கட்டப்பட்டதற்கு, 1ம்பிரதிவாதிதான் பெருந்தொகை கொடுத்தார். அதனைத் தொடர்ந்துதான் 1ம் பிரதிவாதி சொத்தை அனுபவித்து வருகையில், முறையாக 2ம்பிரதிவாதிக்கு செட்யூல்மெண்ட் கொடுத்தும், அதன்மீது 4ம்பிரதிவாதியிடம் முறையாக அடமான கடன் பெறப்பட்டது. அந்தவகையில், வாதி வழக்கில் சொல்லியுள்ள சங்கதிகள் மற்றும் வழக்கு மூலமும் தவறானது. வாய்மொழி பாகப்பிரிவினையின்போது குடும்ப உறுப்பினர்கள் எடுத்த முடிவின்படிதான், ஏற்கனவே கட்டிடம் கட்டிய பிறகு கிரயம் பெறப்பட்டது. வழக்கில் சொல்லப்பட்டுள்ள தோராய வரைபடமும் முற்றிலும் தவறானது. 1ம்பிரதிவாதியின் மற்ற உடன் பிறப்புக்கள் தூண்டுதலின் பேரில்தான் வாதி வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்பது 1, 2 பிரதிவாதிகள் தரப்பு எதிர்வாதம்.

8) 2ம்பிரதிவாதி பெயருக்கு உள்ள செட்யூல்மெண்ட் ஆவணம் மற்றும் அதற்குரிய மூல கிரய ஆவணம் வில்லங்க சான்று, பட்டா மற்றும் தீர்வை ரசீதுகள் அடிப்படையில் பெறப்பட்ட சட்டக் கருத்தின் அடிப்படையில்தான் முறையாக அடமான கடன் 2ம்பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்டது. அந்தவகையில், வாதியின் வழக்கு முற்றிலும் தவறு. எனவே வழக்கின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டுமென்பது 4ம்பிரதிவாதி தரப்பு எதிர்வாதம்.

9) இரு தரப்பு வாத பிரதிவாதங்களையம், வழக்கின் கோப்பினையும் கூர்ந்து ஆய்வு செய்ததில், வாதிக்கு, 1ம்பிரதிவாதி தவிர்த்து இன்னும் 5 மகன்கள் உள்ளனர் என்பதும், 1, 2 பிரதிவாதிகளிடையே 1988ல் திருமணம் நடைபெற்றது என்பதும் தெரிய வருகிறது. 1967ல் தாவா "ஏ" செட்யூல் சொத்து 4 சென்ட் காலி நிலமாக வாதி கிரயம் பெற்றதற்குரிய ஆவணம் பதிவு நகல் வா.சா.ஆ.1. தாவா "ஏ" செட்யூல் சொத்தின் ஒரு பகுதியான தாவா "பி" செட்யூல் சொத்தில் 1ம்பிரதிவாதி குடியிருக்க வாதி வாய்மொழியாக கொடுத்ததாக சொல்லப்பட்டும், அனுமதியும் ரத்து செய்தும், சொத்தில் சுவாதீனம் கோரியும், 10.01.2007ல் வாதி தரப்பில் கொடுக்கப்பட்ட முன்னறிவிப்பின் நகல் வா.சா.ஆ.2. மேற்படி அறிவிப்பிற்கு பிரதிவாதி தரப்பில் பதில் அறிவிப்பு கொடுக்காததற்கு காரணம் அது பற்றி வாதியிடம் கேட்க, தனது மற்ற வாரிசுகள் வற்புறுத்தல் காரணமாகத்தான் அறிவிப்பு அனுப்பியதாக தெரிவித்தாக எதிர் வழக்கு. வா.சா.ஆ.1ன்படி மூக்கன் என்பவரிடம், வாதி 4 சென்ட் நிலத்தை கிரயம் பெற்ற நிலையில், 02.09.2010ல் 1ம்பிரதிவாதி பெயருக்கு மேற்படி மூக்கனின் வாரிசுகள் எழுதிக்கொடுத்ததாக

சொல்லப்படும் கிரய ஆவணம் வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஏற்புடையதா என்பதற்கு தீர்வு காண வேண்டியுள்ளது.

10) தாவா சர்வே எண்ணில் 732ல் மொத்தம் 15.24ல் தனக்கு பாத்தியப்பட்டதில் 4 செண்ட் பூமியை மூக்கன் வாதிக்கு கிரயம் கொடுப்பதாகவும், சொத்து பொதுவில் உள்ளதினால், செக்குபந்தி இல்லை என்றும் வா.சா.ஆ.1ல் சொல்லப்பட்டுள்ளது. மீண்டும் 1985ம் ஆண்டில் மேற்படி மூக்கனிடம் இருந்து சர்வே எண் 732ல் 4 செண்ட் நிலம் குறிப்பிட்டு நான்கு எல்லை கண்டு, வாதி கிரயம் பெற்ற ஆவணம் பதிவு நகல் வா.சா.ஆ.7. 1967ம் ஆண்டில் வா.சா.ஆ.1 ஏற்பட்ட காலத்தில், சொத்து பொதுவில் இருப்பதாக கிரயதாரர் மூக்கன் சொல்கிறார். ஆனால், பின்னிட்டு எந்தவகையில் சர்வே எண் 732 பாகம் பிரிக்கப்பட்டது என்ற விவரம் எதுவும், 1985ல் வா.சா.ஆ.7ன்படி மூக்கன் கிரயம் கொடுத்த ஆவணத்தில், விவரம் எதுவும் சொல்லப்படவில்லை. பின்னிட்டு மூக்கன் இறந்தபிறகு, அவரின் வாரிசுகளிடமிருந்து, 1ம் பிரதிவாதி வாதியின் வீட்டிற்கு கிழக்கிலும், தனது சகோதரர் வீட்டிற்கு கிழக்கிலும், காலி நிலம் 2 செண்ட் சர்வே எண்.732 கிரயம் பெற்றதற்குரிய ஆவணம் பதிவு நகல் வா.சா.ஆ.3. மேலும் 1ம்பிரதிவாதி வாதியின் வீட்டிற்கு கிழக்கு பக்கமும் 2 செண்ட் காலி நிலம் மேற்படி மூக்கன் வாரிசுகளிடமிருந்து கிரயம் பெற்ற பதிவு நகல் வா.சா.ஆ.4. மேற்படி 2 ஆவணங்களும் ஒரே தேதியில்தான் தொடர்ச்சியாக பதியப்பட்டுள்ளது. வா.சா.ஆ.3ல் கண்டுள்ள சொத்தையும், அதில் கட்டப்பட்டுள்ள கதவு எண் 5/453 ஆர்.சி.சி. கட்டிடமும் சேர்த்து, 2ம்பிரதிவாதிக்கு, 1ம்பிரதிவாதி 24.09.2012ல் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ.5. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தை அடமானமாக சமர்ப்பித்து, 4ம்பிரதிவாதியிடம், 2ம்பிரதிவாதி பெற்ற கடனுக்குரிய அடமான ஆவணம் பதிவு நகல் வா.சா.ஆ.6. உரிய ஆவணங்களை பரிசீலித்துதான், சட்ட கருத்து பெற்று கடன் வழங்கியதாக பி.சா.2 சொல்கிறார். இருப்பினும், வங்கியில் அடமான கடன் பெற்றது மட்டுமே ஒரு நபருக்கு சொத்தின் மீது உரிமை ஏற்பட்டுவிடாது.

11) வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள தோராய வரைபடம் பிரதிவாதிகள் தரப்பில், மறுக்கப்படுகிறது. பி.சா.1ம் தனது சாட்சியத்தில், வா.சா.ஆ.14 புகைப்படத்தில் உள்ள 2வது வீடு தன்னுடையது என்பதை ஒப்புக்கொள்கிறார். மேற்படி புகைப்படங்களிலிருந்து பார்க்கையில், தோராய வரைபடத்தில் சொல்லியுள்ளபடி, மேற்கில் கதவிலக்கம் 5/451 தொடங்கி, ஏறுவரிசையில், 5வது வீடு கிழக்கு கடைசியில் கதவிலக்கம் 5/455 என்று தெரிய வருகிறது. மேற்படி வீடுகளுக்கு தெற்கு பக்கம் வாதியின் மற்ற 2 மகன்கள் யோகராஜ் மற்றும் ரமேஷ் 07.04.2000ல் வா.சா.ஆ.13ன்படி, தாவா சர்வே எண்ணில் கிரயம் பெற்ற 5 செண்ட் நிலம், மேற்படி கிரய ஆவணத்தின் பதிவு நகல் பி.சா.ஆ.1. 06.07.2000ல் வாதியின் மகன் ஹால்துரை ஒரு போஜன வகையறாவிடமிருந்து, தாவா சர்வே எண்ணில் 1500 சதுரஅடி வீட்டுமனை உட்பட இன்னும் இதர சொத்துக்களை கிரயம் பெற்ற ஆவணம் வா.சா.ஆ.15. மேற்படி சொத்துதான் வழக்குரை தோராய வரைபடத்தில் பிரச்சனைக்குரிய வீடுகளுக்கு வடக்கு பக்கம் உள்ளதும் தெரிய வருகிறது. வா.சா.ஆ.13 மற்றும் வா.சா.ஆ.15ல் சொல்லியுள்ள செக்குப்பந்திகள் தவறு என்பது எதிர் வழக்கல்ல.

12) மேலும், 1, 2 பிரதிவாதிகள் குடியிருக்கும் கதவிலக்கம் 5/453க்கு உரிய பழைய கதவிலக்கம் 5/425-பி என்று வழக்குரையில் சொல்லியுள்ளதையும், பிரதிவாதி தரப்பில் குறிப்பிட்டு மறுக்கவில்லை. வா.சா.1ம் தனது சாட்சியத்தில், தான் இருதய நோயாளி என்ற நிலையில், 1985ம் ஆண்டு முதல் 1987ம்ஆண்டு வரை 1ம்பிரதிவாதிதான், விவசாயத்தை

கவனித்து, அதற்கு வங்கியில் கடன் பெற்றார் என்பதை மறுக்கிறார். 1988ம் ஆண்டில் தனது பெயருக்கு 10 ஏக்கர் நிலம் கிரயம். 1ம்பிரதிவாதி பெயருக்கு ஏக்கர் 4.51 கிரயம் என்றால் சரிதான் என்று சொல்கிறார். இருப்பினும், அதற்குரிய கிரய ஆவணங்கள் எதுவும் வழக்கில் தாக்கல் இல்லை. வழக்கிலிருந்து தெரிய வருவது வாதிக்கு 6 மகன்கள் 5 வீடுகள் என்பதும், அதில் 1ம்பிரதிவாதி 2வதுமகன் என்பதும் தெரிய வருகிறது. தான் முதலில் கிரயம் பெற்ற 4 சென்ட் நிலத்தில் 1968ம் ஆண்டில் வீடு கட்டியதாகவும், அதற்கு பின்வாசல் இல்லை. அதற்கு பின்னிட்டு தான் கட்டிய 2 வீடுகள் தனது கிரய சொத்து 4 சென்ட்டில் கட்டப்பட்டதல்ல என்பதை மறுக்கிறார். கதவு எண் 5/425 கட்டியுள்ள அடிமனை நிலம் 1ம்பிரதிவாதி பெயரில், உள்ளதாக சொல்வதை மறுத்தும், மேற்படி வீடும் தனது கிரய சொத்து 4 சென்ட்டில்தான் உள்ளதாக சொல்கிறார். தோராய வரைபடத்தில் சொல்லியுள்ள வீட்டின் அமைப்புக்களை அனுசரித்தே வா.சா.1ம் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். அந்த வகையில் தோராய வரைபடம் தவறு என்பது ஏற்புடையதாக இல்லை.

13) பி.சா.1ம் தனது சாட்சியத்தில், 1988ம் ஆண்டில் தனது திருமணத்திலிருந்து தாவா சொத்தில் தான் குடியிருந்து வருவதாகவும், தாவா 5 வீடுகளில், முதல்வீடு 1968லும், அதற்கு பின்னிட்டு 1987க்கு முன்பாக 2 வீடுகளும், மீதம் 2 வீடுகள் அதற்கு பின்பும் கட்டப்பட்டது. 1992ம் ஆண்டில் வாய்மொழி பாகம் ஏற்பட்டது என்று சொல்வதை பிரதிவாதி மெய்ப்பிக்கவில்லை. 1988ம் ஆண்டு கட்டப்பட்ட வீடுதான், தனது பெயருக்கு ஏற்பட்ட கிரய ஆவணம் வா.சா.ஆ.3ல் உள்ளது என்பதை ஒப்புக்கொள்கிறார், ஆனால் மேற்படி கிரயப்படி காலி நிலம்தான் 2 சென்ட் கிரயம் பெற்றதாக உள்ளது. 1ம்பிரதிவாதி, தான் கிரயம் பெற்ற சொத்தை 2 ஆண்டுகள் கழித்து தனது மனைவி பெயருக்கு கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தில், வீட்டின் கதவிலக்கம் 5/425-பி. அதற்குரிய புதிய கதவிலக்கம் 5/453 ஆர்.சி.சி. கட்டிடம் என்று சொல்லப்பட்டுள்ளது. மேற்படி சொத்து விவரம் வாதி வழக்குரையில் சொல்லியுள்ள வீட்டின் கதவிலக்கங்கள், அதற்குரிய புதிய கதவிலக்க விவரங்கள் சரியானது என்பதைதான் மெய்ப்பிக்கின்றது.

14) 4ம் பிரதிவாதி வங்கி மேலாளர் பி.சா.2ம் தனது சாட்சியத்தில் செட்டில்மெண்ட் ஆவணத்தில் கட்டிடத்தின் வயது 2 என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால் அடமான கடன் கொடுக்கும்போது, மதிப்பீட்டாளர் கட்டிடத்தின் வயது 25 என்று சொல்லியுள்ளார். சொத்தை ஆய்வு செய்தபோது எடுக்கப்பட்ட புகைப்படம் நகல் வா.சா.ஆ.18. ஆக கட்டிடத்தின் வயதை 4ம் பிரதிவாதி வங்கி மேலாளர், அதன்மீது அடமானம் கொடுத்தபோது, அதன் வயதை சரியாக நிர்ணயம் செய்யவில்லை என்பது தெரியவருகிறது. பி.சா.1 தனது சாட்சியத்தில், தந்தை கிரயம் பெற்ற 4 சென்ட்டில்தான், 5 வீடு கட்டப்பட்டது என்பதை மறுக்கிறார். இருப்பினும், தான் குடியிருக்கும் வீடு 500 சதுரஅடி அளவு கொண்டது எனறு சொல்வதற்கு முரணாக, அவர் கொடுத்த செட்டில்மெண்ட் வா.சா.ஆ.5ல் 430 சதுரஅடிதான் சொல்லப்பட்டுள்ளது. மேலும் தன் வீட்டிற்கு முன்பக்கம் காலி நிலம் உள்ளது என்று சொல்வதற்கும் முரணாக, வா.சா.ஆ.3ல் தெற்கில் பத்மநாபன் வீடு என்றுதான் உள்ளது. காலி நிலம் என்று சொல்லப்படவில்லை என்பதையும் ஒப்புக்கொள்கிறார். மூக்கனுக்கு எவ்வளவு நிலம் உரிமை என்பதை, இரு தரப்பிலும் எடுத்துரைக்கவில்லை. இருப்பினும், மூக்கன் வாரிசுகளுக்கு கிரயம் கொடுக்க உரிமை இல்லை என்பது வாதி தரப்பு வாதம். எது எப்படியிருப்பினும், வா.சா.ஆ.1 1967லும், வா.சா.ஆ.7 1985லும், வாதி பெயருக்கு மூக்கன் கிரயம் கொடுத்த நிலையில், பின்னிட்டும், தனது கிரயதாரருக்கு வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4ன்படி கிரயம் கொடுக்க உரிமை இருந்தது

என்பதை பிரதிவாதிதான் உரிய சாட்சியம் சான்றாவணம் கொண்டு மெய்ப்பித்திருக்க வேண்டும். தனது பெயருக்கு ஏற்பட்ட மேற்படி 2 கிரய ஆவணங்களையும், பிரதிவாதி மெய்ப்பிக்கவில்லை. மேற்படி கிரய சொத்திற்குரிய வில்லங்க சான்றிதழும் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.1ல் செக்குபந்தி சொல்லாததை வாதி தனக்கு சாதகமாக்கி கொள்கிறார் என்ற பிரதிவாதம் ஏற்புடையதல்ல.

15) இல்லாத உரிமையை ஏற்படுத்துவதற்காகத்தான் செட்டில்மெண்ட ஆவணம் வா.சா.ஆ.5ஐ ஏற்படுத்தியும், அதனை தொடர்ந்து, வங்கியிடம் அடமானம் ஆவணம் வா.சா.ஆ.6 ஏற்படுத்தப்பட்டது உள்நோக்கம் கொண்டது, என்பது வாதி தரப்பு வாதம். வாய்மொழி அனுமதியை ரத்து செய்து 10.01.2007ல் பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பை பெற்றுக்கொண்டும், அதற்கு பதில் எதுவும் கொடுக்காததற்கு காரணம், தந்தை மற்ற மகன்கள் வற்புறுத்தியதால்தான், அறிவிப்பு கொடுத்தாக சொன்னார் என்று சொல்வதும், வழக்கின் தன்மையுடன் ஒப்பிட்டு பார்க்கையில், எதிர் வழக்கு ஏற்புடையதல்ல. மத்திய புலன் ஆய்வு துறையில் 21.06.2013ல் வாதி தாவா பிரச்சனை சம்மந்தமாக, கொடுத்ததாக சொல்லப்படும் புகா நகல் வா.சா.ஆ.16. மேற்படி அறிவிப்பு சார்வு செய்யப்பட்டதிற்குரிய விவரம் வா.சா.ஆ.17. மேற்படி அறிவிப்பை பொறுத்து இவ்வழக்கில் அதிக முக்கியத்துவம் கொடுக்க தேவையில்லை. மேற்படி புகார் பற்றியும் தந்தையிடம் கேட்க, மற்ற மகன்கள் வற்புறுத்தியதால்தான் கொடுத்தாகவும், அதனை திரும்ப பெறப்போவதாக தெரிவித்தார் என்ற பி.சா.1ன் சாட்சியமும் ஏற்புடையதாக இல்லை. மேலும், எதிர்வழக்குரையில், 1998ம் ஆண்டில் பிரதிவாதி திருமணத்திற்கு பிறகு, வாய்மொழி பாகப்பிரிவினையில் தாவா சொத்து 1ம்பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது. பி.சா.1 தனது சாட்சியத்தில். 1991- 1992ம் ஆண்டில் வாய்மொழி பாகம் என்று சொல்கிறார். வாதத்திற்காக பி.சா.1ன் சாட்சியம் ஏற்புடையது என்று எடுத்துக்கொண்டாலும், தான் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் அதுபற்றி விவரம் எதுவும் சொல்லப்படவில்லை.

16) வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள பழைய கதவிலக்கம் அதற்குரிய புதிய கதவிலக்கங்கள் பற்றி விவரம் ஏற்புடையது என்று தீர்வு கண்டுள்ள நிலையில், அனைத்து கதவிலக்கங்களுக்கும் வாதி பெயருக்குதான் வரி ரசீதுகள் பதிவுள்ளது. குறிப்பாக, பிரச்சனைக்குரிய கதவிலக்கம் தாவா “பி” செட்யூல் சொத்து கதவிலக்கம் 5/453, அதற்குரிய பழைய கதவிலக்கம் 5/425-பி வீட்டிற்கும் வாதி பெயரில்தான் தொடர்ந்து, 1988ம் ஆண்டிலிருந்து பல்வேறு தேதிகளில் 2010ம் ஆண்டுவரை செலுத்தப்பட்ட வீட்டு வரி ரசீதுகள் 11 எண்ணிக்கை பி.சா.ஆ.10க்கு எதிராக, பிரதிவாதி தரப்பில் எந்த ஒரு தீர்வை ரசீதும் தாக்கல் செய்யவில்லை. 1991ல் வாய்மொழி பாகம் ஏற்பட்டு, 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்து ஒதுக்கப்பட்டிருப்பின், அதற்கு பின்னிட்டு, உடன்காலத்தில் தன் பெயருக்கு வரி ரசீதுகளை மாற்ற நடவடிக்கை எடுக்காததிற்கும் உரிய சிறப்புக் காரணம் எதுவும் பிரதிவாதி தரப்பில், எடுத்துரைத்து மெய்ப்பிக்கவில்லை. மேற்படி அனைத்து சூழ்நிலைகளையும். கருத்தில் கொண்டும், 1ம்பிரதிவாதி தன் பெயரில் உள்ள கிரய ஆவணம் வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஐயும் மெய்ப்பிக்காத நிலையில், வா.சா.1ன் சாட்சியம் மற்றும் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களையும், நிராகரிக்க எவ்வித முகாந்திரமும் இல்லை என்று தீர்மானித்து இவ்விரு எழுவினாவை வாதிக்கு ஆதரவாகவே விடை காண்கிறேன்.

17) <u>எழுவினா 4 :</u> தாவாவில் கோரியவாறு விளிம்புகை, சொத்து சுவாதீனம் மற்றும் நிரந்தரதடை உத்தரவும் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?

<u>எழுவினா 5:</u> தாவாவில் கோரியபடி செயலுறுத்து கட்டளை கிடைக்கத்தக்கதா?

வாதி தரப்பில் சுட்டிக்காட்டப்பட்ட முன் தீர்ப்பு:-

<u>In the High Court of Madras 2002(3) CTC 416:</u>

> "Father purchased land from and out of his own funds in his name and constructed building in accordance with sanctioned plan using his funds - such property was assessed to property Tax in name of father and taxes were paid - Father permitted eldest son to occupy one of two houses built by him in said land- Soj in permissive occupation cannot claim adverse possession - Son has not perfected his title by adverse possession-

மேற்படி முன்தீர்ப்பில் மகன் எதிர் உரிமை கோருகிறார். இவ்வழக்கில் வாய்மொழி பாகஉரிமை மற்றும் கிரய உரிமை 1ம்பிரதிவாதி கோருகிறார். வழக்கின் பொருண்மை கொண்டு பார்க்கையில் வாதியின் வழக்கிற்கு வலுவூட்டுவதாகவே முன்தீர்ப்பு உள்ளது.

18) தாவா “பி” செட்யூல் சொத்து, வாதியின் கிரய சொத்து 4 சென்ட்டில் உள்ள கதவிலக்கம் 5/453க்கு வாதி பெயருக்கே தீர்வை செலுத்தி வருவதற்கும், வா.சா.ஆ.10ம் சான்றாக உள்ளது. அதற்கு எதிராக பிரதிவாதி தரப்பில் எவ்வித சான்றாவணமும் கொடுக்கப்படாத நிலையில், மேற்படி சொத்தின் உரிமைப்படி, மேலே கண்ட எழுவினாவில், விரிவாக விடை கண்ட நிலையில், இவ்விரு எழுவினாவையும் வாதிக்கு ஆதரவாகவே விடை காண்கிறேன்.

19) <u>எழுவினா 6:</u> தாவாவில் கோரியபடி வாதிக்கு நிரந்தர தடை உத்தரவு கிடைக்கத்தக்கதா?

அடமான ஆவணம் வா.சா.ஆ.6ன் மீது, 4ம்பிரதிவாதி தாவா “பி” செட்யூல் சொத்து கதவிலக்கம் 5/453ன்மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கக்கூடாது என்பது வாதியின் வழக்கு. வா.சா.1ன் சாட்சியம் மற்றும் சான்றாவணங்களுக்கு எதிராக கொடுக்கப்பட்ட பி.சா.1 மற்றும் பி.சா.2ன் சாட்சியம் ஏற்புடையதல்ல என்று தீர்மானித்த நிலையில், இவ்வெழுவினாவையும் வாதிக்கு ஆதரவாகவே விடைகாண்கிறேன்.

20) <u>எழுவினா 1 :</u> தாவா காலவரையால் தடைப்பட்டுள்ளதா?

தாவா காலவரையால் தடைப்பட்டுள்ளது என்பதற்கு, பிரதிவாதி தரப்பில் எவ்வித சாட்சியம் சான்றாவணம் கொடுக்காத நிலையிலும், கொடுக்கப்பட்ட வாய்மொழி அனுமதியும் வா.சா.ஆ.2ன்படி ரத்து செய்தநிலையில், இவ்வெழுவினாவையும் வாதிக்கு ஆதரவாகவே விடை காண்கிறேன்.

21) <u>எழுவினா 7:</u> வாதிக்கு கிட்டும் இதர தீர்வு என்ன?

வழக்கின் தன்மை கொண்டு, வாதிக்கு, பிரதிவாதிகள் தாவா செலவு தொகையை கொடுக்க வேண்டுமென்று தீர்வு காண்கிறேன்.

முடிவாக, தாவா “பி” செட்யூல் சொத்து வாதிக்கே உரிமை என்று விளிம்புகை செய்தும், அதனை 1, 2 பிரதிவாதிகள் சொத்து சுவாதீனம் கொடுக்கவும், அதன்மீது நிரந்தர தடை

உத்தரவு பிறப்பித்தும், 3ம் பிரதிவாதி பஞ்சாயத்து, 1, 2 பிரதிவாதிகள் பெயரில் உள்ள வரி ரசீதை மாற்றி வாதி பெயருக்கே பதிவு செய்ய செயலுறுத்து கட்டளை பிறப்பித்தும், 4ம்பிரதிவாதி மீது நிரந்தர தடை உத்தரவு பிறப்பித்தும், செலவு தொகையுடன் தீர்ப்பாணை பிறப்பித்து தீர்ப்பளிக்கிறேன்.

கால அவகாசம் 2 மாதங்கள்.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு கணினியில் நேராக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, இன்று 23.09.2016ம் தேதி அவையறிய பகரப்பட்டது.

சு.ஒம்/-ஆர்.த.23.9.2016
சார்பு நீதிபதி,
உதகமண்டலம்.

<u>விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u>

<u>வாதி தரப்பு:-</u>

வா.சா.1 : திரு.எல்.ராமன்

<u>பிரதிவாதி தரப்பு:-</u>

பி.சா.1 - திரு.ஆர்.பாலன் (1ம் பிரதிவாதி)

பி.சா.2 - ஆர்.வெங்கட்டன் (4ம் பிரதிவாதி வங்கியின் மேலாளர்)

<u>குறியிடப்பட்ட ஆவணங்கள்:-</u>

<u>வாதிதரப்பு சான்றாவணங்கள்:-</u>

வா.சா.ஆ.1	18.04.1967	கிரய ஆவணம்
வா.சா.ஆ.2	10.01.2007	முன்னறிவிப்பு நகல்
வா.சா.ஆ.3	02.09.2010	1ம் பிரதிவாதிக்கு கொடுத்த கிரய ஆவணத்தின் நகல்
வா.சா.ஆ.4	02.09.2010	2ம் பிரதிவாதிக்கு கொடுத்த கிரய ஆவண நகல்
வா.சா.ஆ.5	24.09.2010	2ம்பிரதிவாதிக்கு,1ம்பிரதிவாதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம்.
வா.சா.ஆ.6	--	4ம்பிரதிவாதியிடம், 2ம்பிரதிவாதி பெற்ற கடனுக்குரிய அடமான ஆவணம் பதிவு நகல்.
வா.சா.ஆ.7	02.07.1985	கிரய ஆவண நகல்
வா.சா.ஆ.8	--	வரி ரசீதுகள் (12 எண்ணிக்கை)
வா.சா.ஆ.9	--	வரி ரசீதுகள் (22 எண்ணிக்கை)
வா.சா.ஆ.10	--	வரி ரசீதுகள் (11 எண்ணிக்கை)
வா.சா.ஆ.11	--	வரி ரசீதுகள் (16 எண்ணிக்கை)
வா.சா.ஆ.12	--	வரி ரசீதுகள் (13 எண்ணிக்கை)
வா.சா.ஆ.13	07.04.2010	கிரய ஆவணம்
வா.சா.ஆ.14	--	புகைப்படங்கள் (10 எண்ணிக்கை)
வா.சா.ஆ.15	06.07.2001	கிரய ஆவணம்.
வா.சா.ஆ.16	21.06.2013	புகார் நகல்
வா.சா.ஆ.17	--	அஞ்சலக ஒப்புதல் அட்டை
வா.சா.ஆ.18	--	புகைப்படங்களின் நகல்

<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள் :</u>

பி.சா.ஆ.1 : 07.04.2000 : கிரய ஆவணம்

சு.ஓம்/-ஆர்.த.23.9.2016
சார்பு நீதிபதி,
உதகமண்டலம்.